# நல்லாயன்



அதிகாலையில் கண்டியிலிருந்து புறப்பட்டு 9 மணியளவில் நீர்கொழும்பை அடைந்தோம். பீங்கான் தொழிற்சாலையைப் பார்வையிட்ட பின்னர் கடற்கரையைப் பார்வையிடலே எமது சுற்றுலாவின் இரண்டாவது கட்டமாகும்.

மதிய உணவின் பின்னர் கடற்கரையைப் பார்வையிடுவதற்காக மிக ஆவலுடன் இருந்தோம். எங்களை பல குழுக்களாகப் பிரித்தனர். ஒவ்வொரு குழுவுக்கும் தலைவர் நியமிக்கப்பட்டார்.

அமர, நயனா, குமார், கமலா என்பவர்கள் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். இனிமேல் குழுக்களாக செயற்பட வேண்டும்.உங்களது குழுவில் எல்லோரும் இருக்கின்றனரா எனப் பார்த்துக் கொள்ளுங்கள். சரியாக மாலை 3.00 மணிக்கு எல்லோரும் பேரூந்தருகில் வந்து சேரவேண்டும் என ஆசிரியர் தலைவர்களுக்குக் கூறினார்.

கடற்கரையில் மணல் வீடு கட்டி விளையாட பலர் விரும்பினர். சிப்பிகள், கடற் தாவரங்கள் சேகரிப்பதற்கும் சிலர் இணக்கம் தெரிவித்தனர்.

எம்மை அறியாமலேயே கடற்கரையில் நேரம் சென்றுவிட்டது. மாலை 3.00 மணிக்கு மாணவர்கள் பேரூந்து இருக்குமிடத்தை அடைந்தனர். சிப்பிகள், தாவரங்கள் வலைத்துண்டுகள் போன்றன பல மாணவர்களின் கைகளில் காணப்பட்டன. நாம் பேரூந்தில் ஏறும் போது எல்லோரும் வந்து விட்டார்களா? என்று ஆசிரியர் கேட்டார். ஆமர பேரூந்தில் ஏறாமல் இருக்கின்றீர்? ஏன ஆசிரியர் கேட்டார். அவன் கட்ற்கரையை நோக்கியபடியே நின்றபோது, ‘‘பாலனைக் காணவில்லை. எனவே தான் பார்த்துக் கொண்டு இருக்கின்றேன்’’. என்று கூறினான். பாலன் எங்களுக்கு முன்னால் இங்கு வந்தான். தற்போது காணவில்லை என அமர பயத்துடன் கூறினான்.

“உங்கள் குழுவிலுள்ளவர்க்கு நீங்களே பொறுப்பென நான் உங்களுக்குக் கூறவில்லையா?” பிள்ளைகளே! நீங்கள் பேரூந்திலே இருங்கள். நான் தேடிக் கொண்டு வருகின்றேன். என ஆசிரியர் பொறுமையற்றவராய் கடற்கரையை நோக்கிச் சென்றார்.

சிறிது நேரத்தின் பின்னர் ஆசிரியர் பாலனைக் கூட்டிக் கொண்டு தூரத்தில் வருவதைக் கண்டோம். நாங்கள் அனைவரும் புன்னகை பூத்தோம். பாலன் ஓடி வந்து பேரூந்தில் ஏறினான். ஆசிரியரும் பேரூந்தில் ஏறியவுடன் கண்டியை நோக்கி புறப்பட்டோம்.

மாணவர்கள் அனைவரும் பாலனுக்கு என்ன நடந்தது என்று அறிய விரும்பினார்கள். பாலன் என்ன நடந்தது என்று நீயே சொல் என ஆசிரியர் கூறினார்.

“நான் தான் முதன் முதலாக பேரூந்தில் ஏறுவதற்கு வந்தேன். ஒருவரையும் காணவில்லை எனவே நான் மீனவர் வலை இழுக்கும் காட்சியைப் பார்க்கச் சென்றேன். அங்கு மீன்கள் அங்குமிங்கும் துள்ளுவதைக் கண்டவுடன் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். ஆசிரியர் அவ்விடத்துக்கு வரும்வரை எனக்கு தெரியாது” என தவறிற்கு மன்னிப்பு கேட்பதைப்போன்று கூறினான்.



ஆம்! பாலனைக் காணவில்லை என்று எமது நண்பர்கள் எவ்வளவு துக்கம் அடைந்தார்கள் என ஒருவர் கூற ஏனையவர்களும் தலையசைத்தனர்.

"ஆசிரியர் உன்னைத் தேடிக் கண்டு பிடித்துவிட்டார். ஆல்லது உன்னைத் தேட வலை வீச வேண்டியிருக்கும். பாருங்கள் எமது ஆசிரியர் எவ்வளவு கருணையுள்ளவர்" என்று குமார் கூறினார்.

இந் நேரத்தில் எமது ஞாயிறு பாடசாலை ஆசிரியர் கற்றுக் கொடுத்த காணாமற்போன ஆட்டின் கதை எனக்கு நினைவு வந்தது. எமது ஆசிரியரும் அந்த ஆயரைப் போல் கருணையுள்ளவர் என நயனா எல்லோருக்கும் கேட்கும் வண்ணமாகக் கூறினாள்.

அன்று நாம் கண்டியை அடையும் போது இருளாக இருந்தது.

செயற்பாடு

1. எமக்கு நல்லாயன் இருப்பதன் அவசியம் என்ன?
2. ஆசிரியர் நல்லாயன் எனக் கருதப்படுவதன் காரணம் என்ன?
3. புதிய ஏற்பாட்டில் காணப்படும் காணாமற்போன ஆட்டின் கதையை வாசிக்கவும். (லூக்கா 15:3-7)